நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.218/2021
அரசு தரப்புக்காக அ.சா.7 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ஜவஹர்லால் | தொழில்/ பதவி | காவல் துணை கண்காணிப்பாளர் |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.14 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day of January 2026.

**<u>முதல் விசாரணை</u>–** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.57)

நான் தமிழ்நாடு காவல் துறையில் கூடுதல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது கடலூரில் வசித்து வருகிறேன். கடந்த 03.11.2019 ஆம் தேதி நான் சிதம்பரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பொறுப்பில் இருந்தபோது சிதம்பரம் நகர காவல் உதவி ஆய்வாளர் திரு.G.பாஸ்கர் என்பவர் பணியில் இருந்தபோது முருகதாஸ், த/பெ.கோபால் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற 337/2019 சட்டப்பிரிவு 174(3) கு.வி.மு.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவையும் சிதம்பரம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். இதர சம்மந்தப்பட்ட நகல்களை என்

பார்வைக்கு வைத்ததை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சம்பவம் இடமான சிதம்பரம் காமாட்சி அம்மன் கோவில் தெரு சந்து வினோத்குமார் இட்லி கடை சென்று பார்வையிட்டு விசாரணை செய்து சாட்சிகள் பாலு, சந்தோஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.6** ஆகவும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே சாட்சிகள் முருகதாஸ், சத்தியகுமாரி, முரளிதரன், தேவேந்திரன், மாசிலாமணி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரணை செய்ததில் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 174(3) கு.வி.மு.ச–வில் இருந்த 306 இ.த.ச ஆக பிரிவு மாறுதல் செய்து அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (அந்த 03.11.2019 ஆம் தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த இ.த.ச பிரிவு 306ன் கீழான வழக்கினை தொடர் புலன் விசாரணைக்காக சிதம்பரம் நகர காவல்நிலைய ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அ.சா.6 பாலு என்பவர் சொன்ன விவரத்தை தான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 நான் விசாரித்தபோதும் புகாரிலும் மூத்த தங்கை செல்வியின் மகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் சத்தியகுமாரி, முரளிதரன் ஆகியோரும் செல்வியின் மகளுக்கு திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் கடந்த வெள்ளிக்கிழமை செல்வியின் மகளுக்கு திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார்கள். செல்வியையோ மணமக்களையோ திருமணம் எங்கு நடந்தது என்பது பற்றியோ நான் விசாரித்தேனா என்றால் இந்த வழக்கிற்கு தேவை இல்லை என்பதால் விசாரிக்கவில்லை.

அ.சா.1 எனது விசாரணையில் "*நான் வீட்டிற்கு சென்ற சமயத்தில் என் மகளின் பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டனர். என் மகள் இறப்பில் சந்தேகம் இருந்ததால் நாங்கள் சாலை மறியல் செய்தோம். சாலைமறியலை விட்டுவிட்டு நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் சென்று ஒரு மனு கொடுத்தோம். மனு கொடுத்துவிட்டு நாங்கள் வந்துவிட்டோம். மறுநாள் சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன்பிறகு எனது மகளின் பிரேத்தை அடக்கம் செய்துவிட்டோம். நான் கலெக்டரிடம் கொடுத்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நானும் அதை பற்றி விசாரிக்கவில்லை.*" என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

திருமணத்தின்போது சண்டை வந்ததாகவும் அதுசம்மந்தமாக ஆஜர் எதிரி மீதோ அல்லது அவர்கள் பெற்றோர்கள் மீதோ நான் விசாரணை செய்த வரையில் புகார் ஏதேனும் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. சரிவர விசாரணை செய்யாமல் தவறான சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.17 )

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.